**Judicial Form No.53**
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII, Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 255 of 2025

Depositions of PW -2 witness for ________ Prosecution / Defence / Court

Name : திரு.சிவகிரி

Father's Name : த/பெ. அசோகன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th **day of March** 2026.

**(எதிரி ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் செந்தாம் பாளையத்தில் வசித்து வருகிறேன். வழக்கு சம்பவத்தில் இறந்துபோன குப்பன் எனது பெரியப்பா. 29.12.2019ம் தேதி பகல் 12.00 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது தொலைபேசியில் சென்னப்பப்ப செட்டி புதூரில் இருந்து காடுவெட்டிபாளையம் செல்லும் வழியில் எனது பெரியப்பாவிற்கு விபத்து எற்பட்டதாக தகவல் கிடைத்ததன் பேரில் எனது பெரியப்பா தலையில் பலத்த காயம் ஏற்பட்டும் இடது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு சம்பவ இடத்தில் இறந்து விட்டார். அதன் பின்னர் எனது அண்ணன் அரிச்சந்திரனுக்கு தகவல் தெரிவித்ததேன். பின்னர் அவர் வந்தவுடம் எனது பெரியப்பாவின் பிரேதத்தை கோவை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அதன் பின்னர் எனது அண்ணன் காவல் நிலையத்தில் புகார் அளீத்தார். எனது பெரியப்பாவின் பிரேத விசாரணையீன் போது உடனிருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதி கோரப்பட்டு சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு நீதிமன்ற**

**அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 29.12.2019ம் தேதி மதியம் 1.15 மணியளவில் நான் காடு வெட்டிபாளையத்தில் செல்ல வேண்டி சென்னப்பசெட்டி புதூரில் இருந்து காடுவெட்டிபாளையம் நோக்கி சென்று கொண்டிருந்தபோது எனக்கு முன்னால் எனது பெரியப்பா அவரது எக்ஸல் இருச்சக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தார் என்றும் அப்பொழுது கிழக்கில் இருந்து மேற்குநோக்கி வந்த மகேந்திரா பிக்கப் வாகனத்தை ஆஜர் எதிரி அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து எனது பெரியப்பாவின் மீது மோதிவிட்டு அதைநான் நேரில் பார்தேன் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது தகவல் தெரிந்துதான் சம்பவ இடம் சென்றுபார்த்தேன் என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.03.12 18:39:50 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**